http://samacheerkalvi.co.in

9T1

## கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

## காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் – 2011

-----

### வகுப்பு 9

காலம்: 2.30 மணி **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள்: 100

குறிப்பு: 1) **விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.**

2) ***வினா எண் III மற்றும் VIII ல் பிரிவு 'அ'விலிருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் பிரிவு 'ஆ'விலிருந்து ஒரு வினாவிற்கும் விடை அளித்தல் வேண்டும்.***

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 10×1=10**

**கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1) கல்வியில் பெரியர் என அழைக்கப்பெறுபவர் -----.

2) கம்பர் பிறந்த ஊர் -----.

3) பண்ணுக்கு அழகு ----- நன்றென்றல்.

4) **உரிய எழுத்தைக் கொண்டு நிரப்புக:**

அ–னவர்க்குச் சர–நாங்களே. (ண்/ந்/ன்)

5) இகழ்வார்ப் பொறுத்தல் த–(லை/ளை)

6) **பின்வரும் குறட்பாவிலுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக:**

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்

தகுதியான் வென்று விடல்

7) **விடைக்கேற்ற வினா அமைக்க:** காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை.

8) சிறுபஞ்ச மூலத்தை இயற்றியவர் காரியாசான்

9) **சொல்லைப் பொருளோடு பொருத்துக:**

| | |
|---|---|
| வனப்பு | பெண் யானை |
| பிடி | அழகு |
| மதுரமொழி | வலிமை |
| வீறு | இனிய மொழி |

10) **இடஞ்சுட்டி விளக்கு:**

பாரதர் தந்நாட்டிலே நாச மெய்தப்

பாவியேன் துணைபுரியும் பான்மையென்னே!

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மூன்று வரிக்கு மிகாமல் விடை தருக: 5×2=10**

11) இறைவனின் முத்தொழில்கள் யாவை?

12) இறைவர் எத்தகையவர்?

13) தலை சிறந்த அறம் யாது?

14) போற்றிக் காக்க வேண்டியது யாது?

15) குறிப்பு வரைக: சிறு பஞ்சமூலம்

16) விதுரன் எதற்காகத் தூது சென்றான்?

17) விதுரன் எதை நினைத்து வருந்தினான்?

**பிரிவு - அ**

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக (ஆறு வரிகளுக்கு மிகாமல்) 3×4=12**

18) இறைவனின் இயல்புகளாகக் கம்பர் கூறுவன யாவை?

19) பொறையுடைமையின் சிறப்புக்கள் யாவை?

20) பிறர் செய்த தீங்கினை எங்ஙனம் பொறுத்தல் வேண்டும்?

21) மன்னன் விதுரனிடம் யாது கூறி, தூது அனுப்பினான்?

22) பாண்டவரின் நாட்டு வளத்தினை எழுதுக.

**பிரிவு - ஆ**

**ஏதேனும் ஒரு வினாவிற்கு விடை தருக: 1×5=5**

23) பிறர் கூறுகின்ற இழி சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் எத்தகு சிறப்புக்குரியவராவார்?

24) சிறு பஞ்சமூலம் வனப்புகளாகக் கூறுபனவற்றைத் தொகுத்தெழுது.

**IV. ஏதேனும் ஒன்றனுக்கு 15 வரிகளுக்கு மிகாமல் விடை தருக: 1×8=8**

25) பொறையுடைமை அதிகாரத்தில் வள்ளுவர் வழங்கும் வளமார்ந்த கருத்துக்களைத் தொகுத்து எழுது.

26) விதுரன் தூது சென்றதைத் தொகுத்தெழுது.

http://samacheerkalvi.co.in



**V. பின்வரும் பாடல்களை அடிபிறழாமல் எழுது:** **2+2+3+3=10**

27) 'அகழ்' எனத் தொடங்கும் குறட்பாவையும் 'படும்' என முடியும் குறளையும் எழுது.

28) 'உலகம்' எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடலையும் 'கண் வனப்பு' எனத் தொடங்கும் சிறு பஞ்ச மூலப் பாடலையும் எழுது.

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடை எழுது:** **10×1=10**

**29) கோடிட்ட இடத்தை நிரப்புக:**

பிற மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகும் மொழி -----.

30) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலை எழுதியவர் -----.

31) காந்தியக் கவிஞர் எனப் போற்றப்படுபவர் -------.

32) உண்மைக் கவிஞர் ----- ஆவார்.

33) விடைக்கேற்ற வினா அமைக்க:

இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச் சாலை என அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.

34) பாரதிதாசன் மூட நம்பிக்கைகளைச் சாடினார் (விடைக்கேற்ற வினாத் தொடர் அமைக்க)

**35) சந்திப்பிழை நீக்குக:**

எளிய மக்களை நோக்கி கவிதை கருவியை திருப்பி அமைத்த பெருமை பாரதியைச் சாரும்.

**36) வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக:**

வானம்பாடி இயக்கம் புதுக் கவிதை வளர்ச்சி ----- துணை புரிந்தது (ஐ/ஆல்/கு)

37) மணிக்கொடி எனும் இதழ் ----- புதுக் கவிதைகளைப் படைத்தனர் (ஐ/ஆல்/கு)

**38) பொருத்துக:**

| | | |
|---|---|---|
| க.நா. சுப்பிரமணியன் | - | உரைநடைக் காலம் |
| 20ஆம் நூற்றாண்டு | - | மணிக்கொடி |
| அமெரிக்க கவிஞர் | - | வாலி |
| புதுக்கவிதை | - | வால்ட் விட்மன் |

**VII. எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளில் விடை தருக:** **5×2=10**

39) மொழிக் குடும்பம் என்றால் என்ன?

40) திராவிடப் பெரு மொழிகள் யாவை?

41) தமிழ் எனும் சொல் குறித்து ஈராஸ் பாதிரியார் கூறுவது யாது?

42) இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதுக.

43) உரைநடைக்காலம் எது? ஏன்?

44) கவிமணியின் கவி இன்பத்திற்குச் சான்று தருக.

45) 'சுரதா உவமைக் கவிஞர்' எனப் பாராட்டப்ப படுவதேன்?

**பிரிவு - அ**

**VIII. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

46) இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றி விளக்கு.

47) திராவிடம் எனும் சொல் பற்றிக் கால்டுவெல் கூறுவன யாவை?

48) திராவிட மொழிகளுள் தமிழ் மொழி பெறுமிடம் யாது?

49) புதுக் கவிதை வளர்த்த இதழ்கள் யாவை?

50) சமுதாய மேம்பாட்டிற்குப் பாரதியின் பங்களிப்பு யாது?

**பிரிவு - ஆ**

**ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×5=5**

51) செம் மொழித் தகுதிக்கான அளவு கோல்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

52) பாரதி தாசனின் கவிதைப் போக்கினை எழுதுக.

**IX. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக:**

53) தமிழின் சிறப்புகளைத் திராவிட மொழிகள் பாடத்தின் படி விளக்குக.

54) புதுக் கவிதை தோன்றி வளர்ந்த முறை எழுதுக.

------